**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.81/2026</u>**

ம.சா.2 கருணாநிதி த/பெ கோபால் நாள் : 23.07.2026

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து குறித்து நான் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை. விபத்தானது திருப்பத்தூரில் இருந்து புதுபேட்டை செல்லும் சாலையில் வேடிநகர் என்ற இடத்தில் விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனமும், மகேந்திரா பிக்கப் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நான் என் வீட்டில் வெளியில் இருந்த போது விபத்தை நேரில் பார்த்தேன். விபத்து நடந்த இடத்திற்கு இரண்டாவது வீடு என்னுடைய வீடு. விபத்து நடந்த உடன் சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தேன். இருசக்கர வாகனத்தில் வந்தவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. இருசக்கர வாகனத்தில் வந்தவர் தலையில் அடிப்பட்டு இறந்தார் என்றும், தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயங்கள் ஏற்பட்டிருக்காது என்றால் தலைக்கவசம் இருந்ததா என்று தெரியவில்லை. அங்கிருந்தவர் அவர் ஆம்புலன்ஸை அழைத்தனர், நான் அவரை ஏற்றி அனுப்பினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.